பெருநகர குற்றவியல் நடுவர், 4–வது விரைவு நீதிமன்றம், ஜார்ஜ் டவுன், சென்னை –1.
முன்னிலை.திருமதி.R.சுகந்தி, பி.ஏ., எம்.எல்.,
STC.No.2638/2024

**புகார்தாரர்தரப்பு 1 வது சாட்சி** நாள்: 05.11.2025.

பெயர் –Ladullal Jain S/o. Dalchand Jain

//1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டம் (மையச்சட்டம் 44/1969)இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு உளமார உறுதியளிக்கப்படுகிறது// சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**(எதிரி ஆஜர் . அவரது வழக்கறிஞர் ஆஜர்)**

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை (சத்திய பிரமானத்தின் பெயரில்)**

1). நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் நான் நகைக்கடை வியாபாரம் செய்கிறேன். பைனான்ஸ் என்னுடைய தொழில் கிடையாது என்றால் தவறு. நான் அந்த தொழிலும் செய்து வருகிறேன். மேற்கண்ட தொழிலுக்கு நான் உரிமம் பெற்றுள்ளேனா என்றால் இல்லை. என்னென்ன ஆவணங்கள் பெற்று நான் கடன் அளிப்பேன் என்றால் காசோலையும், கடனுறுதிச் சீட்டும் பெற்றுக்கொள்வேன். நான் கடனை தெரிந்த நபருக்கு தான் அளிப்பேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் குறிப்பிட்டுள்ள சுரேஸ்குமார் யார் என்றால் அவர் என் நண்பர் ஆவார். சுரேஷ்கும், எனக்கும் பண பரிவர்த்தனை உள்ளதா என்றால் உள்ளது.

2.இவ்வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியாது என்றாலும் சுரேஷ்குமாருக்குத்தான் நான் பணம் அளித்தேன் என்றால் தவறு. எதிரிகள் இருவரும் என் அலுவலகத்திற்கு வந்துள்ளார்கள். நான் கடனாக அளித்தாக கூறப்படும் தொகையை எவ்வாறு எதிரிக்கு அளித்தேன் என்றால் ரொக்கமாகத்தான் அளித்தேன். அவ்வாறு கடன் அளிக்கும்போது எதிரிகளிடமிருந்து என்ன ஆவணங்களை பெற்றுள்ளேன் என்றால், நிலம் தொடர்பான ஆவணங்களை பெற்றுள்ளேன். எந்த நிலத்திற்காக ஆவணங்கள் பெற்றுள்ளேன் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

3) மேற்கண்ட நில ஆவணங்களின் உரிய தரப்பினர் எதிரிகள் கிடையாது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அதுபற்றி தெரியவில்லை. ஆனால் நம்பிக்கையின் அடிப்படையில் பணம் அளித்தேன். அந்த நில ஆவணம் தொடர்பான தரப்பினர்கள் என்னிடம் பணம் பெறவில்லை என்றால் ஆவணத்தில் உள்ள தரப்பினர்கள் யார் என்று நான் பார்க்கவில்லை. ஆனால் எதிரிகள் என்னிடம் பணம் பெற்றார்கள்.

4) என்னிடம் காட்டப்படும் பி8 ஆவணம் மூலம்தான் எதிரிகள் கடன் பெற்றார்கள் என்றால் சரிதான். மேற்கண்ட பி8 ஆவணத்தில் வில்லங்கங்கள் ஏதேனும் உள்ளது என்று பார்தேனா என்றால் சுரேஸ்தான் பார்தான் நான் பார்க்கவில்லை. மேற்கண்ட சுரேஸ் எங்கு உள்ளார் என்றால் அவர் இறந்துவிட்டார். சுரேஸ்தான் இந்த ஆவணங்கள் பி8 காண்பித்து கடன் பெற்றுள்ளார் என்றாலும் அவர் இறந்துவிட்ட காரணத்தினால் எதிரியிடமிருந்து பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தவறு.

5) பி1 மற்றும் பி2 கடனுறுதி சீட்டு மற்றும் காசோலையில் உள்ள கையொப்பங்கள் எதிரியினுடையது கிடையாது என்றாலும் நானே அவர்களின் கையொப்பங்களை போட்டுக்கொண்டேன் என்றால் தவறு. மேற்கண்ட விவரங்களை எதிரிக்கு அனுப்பிய பதில் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளோம் என்றால் எனக்கு அதுபற்றி தெரியவில்லை. எதிரிகள் எனக்கு எந்த தொகையும் தரவேண்டியது இல்லை என்றாலும், சுரேஸ் குமார் தான் தரவேண்டியது அவர் இறந்துவிட்டக் காரணத்தினால் எதிரிகள் மீது பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தவறு. எதிரிக்கு அளித்ததாக கூறப்படும் கடனை வருமான வரியில் காட்டியுள்ளேனா என்றால் சரிதான். அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால்

இல்லை. எதிரிகள் சட்டப்பூர்வமாக பணம் அளிக்க கடமைப்பட்டவர்கள் அல்ல என்றாலும் அவர்களின் கடனுறுதி சீட்டு மற்றும் காசோலைகளை தவறாக பயன்படுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தவறு.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துத் காண்பிக்கப்பட்டு சரியென்று ஒப்புக் கொண்ட பின் என் முன்னிலையில் கையொப்பம் செய்தார்.

//Sd//Tmt.R.Suganthi.,
பெருநகர நடுவர் / விரைவு,
நீதிமன்றம்–4, ஜார்ஜ் டவுன், சென்னை –01.